# சிறப்பு சார்பு நீதிமன்ற, (மோட்டார் வாகன விபத்து இழப்பீடு தீர்ப்பாயம்)
# திருப்பத்தூர், வேலூர் மாவட்டம்.
# MCOP.92/2020

தேதி- 12.03.2024

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : தமிழ்செல்வன் | வயது | : |
| த.பெ. | : | தொழில் | : |
| ஊர் | : | சமயம் | : |
| வட்டம் | : | ஜாதி | : |
| மாவட்டம் | : | | |

<u>நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அதில் உள்ள அனைத்து விவரங்களும் எனக்கு தெரியும்.</u>

**2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

**1.** விபத்து நடந்த அன்று 20.10.2019 அன்று நான்தான் வண்டி ஓட்டி சென்றேன். TN 23 BP 2709 Discovery என்ற வாகனத்தை நான் தான் தனியாக ஓட்டி சென்றேன். திருப்பத்தூர் டூ நாட்றாம்பள்ளி செல்லும் சாலையில் திரியாலம் கூட்ரோடு அருகே ஓட்டி சென்ற போது விபத்து ஏற்பட்டது. விபத்திற்கு பிறகு எனது மனைவி பிரியங்கா 1 மணி நேரம் கழித்து மருத்துவமனையில் என்னை பார்த்தார். எனது மனைவி விபத்தை நேரில் பார்க்கவில்லை. விபத்து நடந்தது குறித்து முதல் தகவல் அறிக்கையில் அவர் கூறியுள்ள விவரங்கள் அவருக்கு நேரடியாக தெரியாது என்றால் சரி.

2. எனது இருசக்கர வாகனத்தின் மீது எதிரே வந்த இருசக்கர வாகனம் மோதியது என்றால் சரி. விபத்து நடந்த சாலை வடக்கு தெற்காக செல்கிறது. விபத்து சாலையின் கிழக்கு பக்கம் நடந்தது என்றால் சரி. வடக்கு தெற்கு சாலையில் எனக்கு இடது புறம் என்பது மேற்கு புறம். தவறான பாதையில் இருசக்கர வாகனத்தை ஓட்டி சென்று தன்னிச்சையாக விபத்தை ஏற்படுத்திக் கொண்டேன் என்றால் சரியல்ல.

3. விபத்து சமயம் தலைகவசம் போடவில்லை என்றால் சரியல்ல. தலைகவசம் அணிந்து சென்றிருந்தால் எனக்கு தலையில் காயம் ஏற்பட்டிருக்காது என்றால் சரியல்ல. தலைகவசம் அணியாததால் தான் எனக்கு தலையில் காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. தவறான பாதையில் வாகனத்தை ஓட்டி சென்றதால்தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரி. எதிரே வந்த வண்டி ஓட்டுநர் சரியான பாதையில் மிதமான வேகத்தில் சாலை விதிகளை கடைபிடித்து வந்தார் என்றும் நான் போக்குவரத்து விதிகளை மீறியதால் தான் வழக்கு விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல.

4. விபத்து நடந்த உடன் திருப்பத்தூர் அரசு மருத்துவமனையில் என்னை சேர்த்தார்கள், விபத்து நடந்த விவரம் குறித்து மருத்துவர் கேட்டதன் பேரில் கூறினேன். விபத்து பதிவேட்டில் நான் மது அருந்தியதாக இருந்ததால் தான் அதனை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. ம.சா.ஆ. 2 காயச்சான்று, நானே கீழே விழுந்துவிட்டதால் விபத்து ஏற்பட்டதாக காணப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மது போதையில் நானே கீழே விழுந்து விபத்து ஏற்பட்டது என்று சொன்னால்

சரியல்ல. 27.10.2019 வரை காவேரி மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தேன். அங்கு தான் 2 வருடங்களாக பார்த்து வருகிறேன். ம.சா. ஆ. 12 ல் சிடி ஸ்கேன் பரிசோதனையில் எலும்பு முறிவுகள் இல்லை என கூறப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

5. என்னால் தாக்கல் செய்யப்பட்டுள்ள மருத்துவ ரசீதுகள் அதிகபடியான தொகைக்காக தயாரிக்க பட்டது என்றால் சரியல்ல. பல்வேறு தலைப்புகளில் நான் கோரியுள்ள தொகை அதிகபடியானது என்றால் சரியல்ல. என்னுடைய அஜாக்கிரதையின் காரணமாக வழக்கு விபத்து ஏற்பட்டதால் 2ம் எதிர்மனுதாரர் இழப்பீட்டு தொகையை கொடுக்க கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் என்னுடைய வாகனத்திற்கு காப்பீடு இல்லை என்றால் சரி. நான் எலக்ட்ரிசியன் ஆக வேலை செய்வதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை. மாதம் ரூ. 30,000 சம்பாதிப்பதாக கூறியிருப்பதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. நான் கோரியுள்ள தொகை அதிகபடியானது என்றாலும் எனது மனு தள்ளுபடி செய்யதக்கது என்றாலும் சரி.